முருகப்பெருமான் துணை

**மகான் பரத்துவாசர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.12.2022**, செவ்வாய்கிழமை

1. வானவர்கள் வியக்க தருமத்தை
வள்ளலாக வழங்கி அருளும்
ஞான தேசிகனே அரங்கனே
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சிலை திங்கள்
குறைவிலா பஞ்சதிகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 05 ம் நாள் 20.12.2022, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு பரத்துவாசர் யானும்
3. யானும் அரங்கன் அவதாரம்
உலகம் அறிந்து உயரவே
ஞானமாக இவை ஆசியுரைப்பேன்
நன்மை நல்லெண்ணம் வழி சித்திகள்
4. சித்திகள் அடைய உலகோர்
சிந்தை தெளிவு காணவேணும்
உத்தமர்களாக தேர்வு காண
உலகினில் மாற்றம் செய்திட
5. செய்திட சரவணச் சுடராம்
சித்திமிகு வழிபாடு தன்னை
அய்யம் கொள்ளா துவக்கி
அனுதினம் பூசை செய்துவர
6. வரவர ஞானிகள் படை
வலம் வரும் இவர்களை நோக்கி
அரஹரா முருகா எனும் முழக்கம்
அளவிலா ஒலியாகப் பெருகி
7. பெருகியே அண்டமெங்கிலும் நாதம்
பிரணவமாகப் பரவி நின்றிட
முருகப்பெருமான் இவர்கட்கு
முழுமைஞானம் தரும் வண்ணம்
8. வண்ணமுடன் சக்திகள் பரவி
வையகமே சுத்தி ஆகும்
எண்ணம் வழி மக்களிடையே
எங்கும் குருவருள் நிரம்பி
9. நிரம்பி சத்தியமும் தருமமும்
நிலைத்துமே பேருலகினில்
வரம்பிலா வளர்ச்சிக் கூடியே
வாழும் காலமே மக்களுக்கு

10. மக்களுக்கு ஞானிகள் எனும்
மாற்றம் மகத்துவம் கூடி
ஆக்கமுடன் சித்திகள் பெற்று
அரங்கனுள் ஆறுமுகனுள் தேறி

11. தேறியே ஞானயுகம் படைத்து
தேசிகனார் நோக்கம் வழி
மாறுதலை கலியினில் புரிவர்
மொழிந்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–